**D.V.C.No.8/2025**
**P.W.1**

| | | |
|---|---|---|
| திருமதி. ஆனி ஜேசுனா | க/பெ.ஜின்சன் ராய் | Date: 21.07.2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**( Petitioner present, Respondent absent)**

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. விவாகரத்து கோரி திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தற்போது மேற்படி வழக்கானது IDOP.No.144/2025 ன் கீழ் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் வள்ளியூரில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த மனுவில் எனது கணவர் ஆட்சேபனை தெரிவித்து சேர்ந்து வாழ வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். திருமண சமயத்தில் எனது கணவர் பெங்களூரில் வேலை பார்த்து வந்தார். எங்கள் திருமணத்திற்கு பிறகு நாகர்கோவில் இம்பீரியல் ஆடிடோரியத்தில் வைத்து 05.12.2021 அன்று வரவேற்பு நிகழ்வு நடந்தது என்றால் சரிதான்.

2. 1ம் எதிர்மனுதாரர் சகோதரி 2009 ம் ஆண்டு திருமணம் செய்து வெள்ளமடத்தில் வசித்து வந்தார் என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் எங்கள் திருமணத்திற்கு பிறகு தோப்பூரில் உள்ள வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரிதான். தற்போது வெள்ளைமடத்தில் வாடகை வீட்டில் வசித்து வருகிறார் என்றால் தெரியாது. நாங்கள் பிரிந்து வந்தபோது வெள்ளமடத்தில் வாடகை வீட்டில் தான் வசித்து வந்தார். அந்த வீட்டின் வாடகை மாதம் ரூ.6000 ஆகும். எங்கள் திருமணத்திற்கு பிறகு நான் கொஞ்ச நாள் பெங்களூரில் 1ம் எதிர்மனுதாரருடன் வாடகை வீட்டில் வாழந்தேன் என்றால் சரிதான்.

3. நான் அங்கிருந்து வந்த பிறகும் 1ம் எதிர்மனுதாரர் அந்த வீட்டில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அந்த வீட்டின் வாடகை மாதம்

ரூ.9000 ஆகும். நான் தற்போது வடக்கன்குளத்தில் வசித்து வருகிறேன் அந்த வீடானது எனது அப்பாவின் குடும்ப சொத்து என்றால் சரிதான். அரகோணத்தில் எனது அப்பாவிற்கு சொந்தமாக வீடு உள்ளது என்றால் சரிதான். எனது உடன் பிறந்த சகோதரி திருமணம் முடிந்து திருவனந்தபுரத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் பெங்களூரில் வசித்து கருவுற்றபோது 24.04.2022 அன்று தோப்பூரில் உள்ள வீட்டிற்கு வந்தேன் என்றால் சரிதான். 24.07.2022 அன்று எனக்கு அந்த வீட்டில் வைத்து வளைகாப்பு நடந்தது என்றால் சரிதான்.

4. அதன் பின்னர் பிரசவத்திற்காக அரகோணத்தில் உள்ள எனது அப்பா வீட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான். பிரசவத்திற்கு 1 மாதத்திற்கு முன்பு 1ம் எதிர்மனுதாரர் 1 மாதம் விடுப்பு எடுத்து என்னுடன் இருந்தார் என்றால் சரியல்ல. சுமார் 15 நாட்கள் மட்டும் இருந்திருப்பார். எனக்கு குழந்தை பிறந்து 1 வாரம் கழித்து அவர் வேலைக்கு சென்றார் என்றால் சரிதான். குழந்தை பிறந்த உடன் அவரது சகோதரிகள் சேர்ந்து தங்க அரைஞாண், தங்க காப்பு போட்டார்கள் என்றால் சரிதான். அது சுமார் 9 கிராம் இருக்கும். 1ம் எதிர்மனுதாரருக்கு Eosinophilia என்ற சளி நோய் உண்டு என்றால் சரிதான். கடைசியாக அது சம்மந்தமாக திருவனந்தபுரம் கிங்ஸ் மருத்துவமனையில் ஒவ்வொருமாதமும் சிகிச்சை எடுத்து வந்தார் என்றால் சிகிச்சை எடுத்து வந்தார் ஆனால் ஒவ்வொரு மாதமும் செல்லவில்லை. அவர் ஒருமுறை சிகிச்சைக்கு செல்வதற்கு ரூ.10000 செலவாகும் என்றால் சரியல்ல. அவர் 3 முதல் 4 முறை சென்றிருப்பார். முதல் முறை மட்டும் ரூ.10000 செலவானது. அதன் பின்னார் பார்வை கட்டணம் ரூ.900 மற்றும், மருந்துசெலவு மட்டும்.

5. அவர் திருவனந்தபுரம் PRS மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துவந்தார் என்றாலும் அதற்கு மாதம் ரூ.10000 செலவாகிறது என்றால் சரியல்ல. எங்கள் குழந்தை மீது எதிர்மனுதாரர் பாசமாக தான் நடந்து வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் என்னை தாக்கி காயப்படுத்தியதாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவோ அது சம்மந்தமாக எந்த காவல் நிலையத்திலும் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் குழந்தை பிறந்து 03.06.2024 அன்று ARVM Baby Product நிறுவனத்திற்கு வேலைக்கு சென்றேன். எனக்கு அங்கு மாத சம்பளம் ரூ.20000 ஆகும்.

6. எனது வங்கி கணக்கு விவரம் தாக்கல் செய்துள்ளேன். வள்ளியூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு என்னை ஆலோசனை செல்லவேண்டும் என்றும் 15 நாட்கள் ஒருமுறை குழந்தையை காட்டவேண்டும் என்று சொன்னார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு குடும்ப நல ஆலோசனை மையம் நான் செல்லவில்லை என்றால் சரிதான். எனது மாமியார் வாடகை வீட்டிலும், உடல்நிலை சரியில்லை என்றால் அவர்கள் மகள் வீட்டிலும் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. நான் எனது கடந்த கால நிகழ்வுகளை சொல்லி எதிர்மனுதாரர் கொடுமை செய்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

7. எனது குடும்ப வாழ்க்கையில் பண தேவை ஏற்பட்டபோது எனது பெற்றோர்கள் அவ்வபோது பணம் தந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது மடிகணினியை பார்த்து எனது கடந்த கால குறுந்தகவலை கண்டுகொண்டு என்னை கொடுமை செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் மதுஅருந்திவிட்டு என்னை கொடுமை

செய்வதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எனது கணவருக்கு மதுஅருந்தும் பழக்கம் இல்லை என்றாலும் சரியல்ல.

8. 2022 ஏப்ரல் மாதத்தில் பெங்களுர் வீட்டில் எனது சகோதரி மற்றும் அவரது கணவர் வந்தபோது எனது கணவர் என்னையும் எனது சகோதரி கணவரையும் சந்தேகப்பட்டதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த குறிப்பிட்ட நாளில் எனது கணவரின் நண்பர்கள் வந்திருந்தார்கள் என்றால் சரிதான். அப்போது எல்லோரும் பேசிகொண்டிருந்தபோது நானும், எனது சகோதரி கணவரும் தனியாக பேசிக்கொண்டிருந்ததால் எனது கணவர் எல்லோரிடமும் சேர்ந்து பேசுமாரு மட்டும் தான் சொன்னார் என்றால் சரியல்ல. குழந்தை பிறந்த பிறகு வாரம் தோறும் எனது கணவர் வந்து பார்த்து செல்வார் என்றால் சரிதான்.

9. 10.09.2023 அன்று ஞானஸ்தானம் நடந்ததாக சொல்கிறேன் என்றால் 9 ம் தேதியா அல்லது 10 ம் தேதியா என்று தெரியவில்லை. ஆனால் அந்த மாதம் தான் நடந்தது. மனுவிலும், முதல் விசாரணையிலும் யாருக்கு ஞானஸ்தானம் நடந்தது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் அவ்வாறு ஞானஸ்தானம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு அந்த நிகழ்வில் என்னை கெட்டவார்த்தை பேசி, அடித்ததாக சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு விசேசம் எதுவும் அன்றைய தினம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

10. அதன் தொடர்ச்சியாக ஊருக்கு வந்தபோதும் அழைப்பேசி வாயிலாகவும் என்னை தொந்தரவு செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் தேதி சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார்

எதிர்மனுதாரர்கள் கேட்டுகொண்டதின் படி மன்னிப்பு கேட்டதாகவும் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எந்த தேதியில் மேற்படி நிகழ்வு நடந்தது என்பதை மனுவிலும், முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய கணவர் அரைகுறை ஆடையில் ஒரு பெண்ணிடம் அழைபேசி திரையில் பேசிக்கொண்டிருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எந்த தேதியில் அவ்வாறு பேசினார் என மனுவிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

11. அப்படி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்பதால் தான் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் நண்பர்களுடன் மதுஅருந்திவிட்டு வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் நண்பர்களோடு மதுஅருந்திவிட்டு வரவில்லை.அவர்கள் உறவினரோடு மதுஅருந்திவிட்டு இரவு காலதாமதமாக வீட்டுக்கு வருவார். அந்த உறவினர் பெயர் மனுவிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 2024 ம் வருடம் பெங்களூர் வேலையை விட்டுவிட்டு வீட்டுக்கு வந்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றாலும் அவர் அப்போது வீட்டில் இருந்து வேலை பார்த்து வந்தார் என்றால் எனக்கு மாதம் சொன்னால் தான் சொல்லமுடியும் இரண்டுமே ஒரே வருடத்தில் தான் நடந்தது.2024 ம் வருடத்தில் வீட்டில் இருந்து வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். அப்போது நான் நாகர்கோவிலில் வேலை பார்த்தபோது அவர் தான் என்னை வந்து விட்டு செல்வார் என்றால் எல்லாநாளிலும் அவ்வாறு வருவதில்லை.

12. நான் வேலைக்கு செல்லும் போது குழந்தையை 2ம் எதிர்மனுதாரர் தான் கவணித்து வந்தார் என்றால் சரிதான். அதேபோல் நெருங்கிய

உறவினர் அறுவை சிகிச்சைக்கு அவரை பார்க்க என்னை அனுமதிக்கவில்லை என்று கூறியுள்ளேன். ஆனால் யார் என்று குறிப்பிட்டு மனுவிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தாய்மாமன் ஜெரால்ட் என்பவருக்கு அறுவை சிகிச்சை செய்து குணமடைந்தது. அவர் உடல்நிலை சரியில்லாதபோது என்னையும் எனது குடும்பத்தாரையும் எனது கணவர் தான் மருத்துவமனை அழைத்து சென்று கவனித்து வந்தார் என்றால் சரியல்ல.

13. தேங்காய் துருவல் பட்டு காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன். ஆனால் அது சம்மந்தமாக சிகிச்சை எடுத்ததாக மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அது சம்மந்தமாக எந்த சிகிச்சையும் எடுக்கவில்லை. அவ்வாறு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரை பிரிந்து செல்லும்போது ஈஸ்டர் பண்டிகை கொண்டாட செல்வதாக சொல்லி எனது அப்பாவுடன் சென்றேன் என்றால் சரியல்ல. அதன் பின்னர் எனது அலைபேசியில் அவரது எண்ணை தடை செய்தேன் என்றால் சரியல்ல. குழந்தையை பார்க்க கேட்டபோது நான் மறுத்தேன் என்றால் சரிதான். அவர் தூக்கி கொண்டு சென்றுவிடுவார் என பயமாக இருந்தது அதனால் மறுத்தேன்.

14. 17.04.2025 முதல் 24.04.2025 வரை 1ம் எதிர்மனுதாரர் குழந்தையை காட்டவில்லை என்றால் அவர் வந்து பார்க்கவில்லை. 24.04.2025 அன்று குழந்தையை பார்க்க வந்தபோது காட்டவில்லை என்றால் சரியல்ல. ஜன்னல் வழியாக காட்டினேன். வள்ளியூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் குழந்தையை காட்டும்படி மிரட்டியதாகவும், அதனால் புகார் கொடுத்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தில் நான் குழந்தையை காட்டியதாக

குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 24.04.2025 அன்று 1ம் எதிர்மனுதாரர் குழந்தையை பார்க்கவந்து நான் காட்டாதபோது 1ம் எதிர்மனுதாரர் அவசர எண்.100 தொடர்புகொண்டுபோலீசார் வந்த பிறகு தான் காட்டினேன் என்றால் நானும், அவசர எண்.100 க்கு தொடர்பு கொண்டேன் அவரும் தொடர்பு கொண்டார்.

15. பின்னர் போலீசார் வந்து குழந்தையை வாங்கி அவரிடம் கொடுத்து சிறிது நேரம் கழித்து வாங்கி கொடுத்தார்கள் என்றால் சரிதான். ம.சா.ஆ.6 வாடகை பத்திரம் ஆவணத்தில் ரூத் சரோஜினி என்பவர் எனது ஆச்சி ஆவார். மேற்படி ஆவணம் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதில் சாட்சிகள் பெயர், முகவரி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ–8 Pen drive சம்மந்தமாக 63 BNSS சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்பதால் அவை நிலைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல. மனுவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. மனுவிலும், முதல் விசாரணையிலும் சொன்னது போல் குடும்ப வன்முறை நிகழவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதள்ளுபடிசெய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2026.07.21 18:23:12 +0530

Judicial Magistrate,
Valliyoor.